**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை – திரு.எஸ்.உத்தமராஜ், பி.ஏ., பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்**

**2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.55/2024**
**in**
**O.S.No.100/2022**

ரெங்கராஜன் – மனுதாரர்/வாதி

/எதிர்/

சுசீந்தரன் – எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 14.08.2024–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.சி.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.பி.சுந்தர்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு விவாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151–இன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Signed by S UTHAMARAJ
Additional Sessions Judge.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர்/வாதி அசல் வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை மற்றும் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு வாதி தரப்பில் 01.03.2024 ஆம் தேதி வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா சொத்து சம்பந்தப்பட்ட சில ஆவணங்கள் வாதிக்கு தற்போது கிடைக்கப்பெற்றதால் மேற்படி ஆவணங்களை முதல் விசாரணையில் குறியீடு செய்ய முடியவில்லை. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்பதால் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு அசல் வழக்கை மேற்கொண்டு நடத்த உத்தவிடக்கோரி மனுதாரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர் உண்மையான விபரங்களை மறைத்து பொய்யான விபரங்களுடன் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / வாதி அசல் வழக்கினை தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி

Signed by S UTHAMARAJ
Additional Sessions Judge.

தாக்கல் செய்துள்ளார். மனுவில் கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்தவற்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. எனவே மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. பிரச்சனை :**

இருதரப்பும் கேட்கப்பட்து. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மேற்கண்ட அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் மேற்கண்ட அசல் வழக்கில் பிரதிவாதி. வழக்கு சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி பாகப்பத்திரம் பதிவு செய்து கொடுக்கும்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்கோரியும், மறுக்கும்பட்சத்தில் வழக்கு சொத்துக்களில் வாதிக்குரிய பாதி பங்கை பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், பிற பரிகாரங்கள் கோரியும் மேற்கண்ட அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு வாதி தரப்பில் 01.03.2024 ஆம் தேதி வாதி

தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் 24.06.2024 அன்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வழக்குச்சொத்து சம்பந்தமாக சில ஆணவங்கள் தற்போதுதான் கிடைத்தது என்றும் அசல் வழக்கை மேல்நடத்துவதற்கு மேற்படி ஆவணங்கள் அவசியமானது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. வழக்கின் பொருண்மைகளை இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தின் முன் கொண்டு வர வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு அனுமதிக்க வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

7. மனுவில் கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வருமான வரி, வணிக வரி மற்றும் தொழில் வரி சம்பந்தப்பட்ட ஆவணங்களாக உள்ளன. அவை தற்போது கிடைக்கப்பெற்றதாக மனுதாரர்

Signed by S UTHAMARAJ
Additional Sessions Judge.

தரப்பில் கூறப்பட்டுள்ளது. அவை எவ்வாறு, ஏன் தற்போது கிடைக்கப்பெற்றது என மனுதாரரின் சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில் விளக்கப்படவில்லை. எனினும் இத்தகைய ஆவணங்கள் வரி செலுத்துவது தொடர்பாக கணக்காயர் (Auditor) போன்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததன் காரணமாகக் கூட, அவற்றைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. மேலும் வா.சா.1–றின் முதன்மை சாட்சிய விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு முன்பாக இம்மனு 24.06.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்சொன்ன காரணங்களால் வாதி அவருடைய தரப்பை முழுமையாக சொல்ல ஒரு வாய்ப்பு அளிக்க, காலதாமத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தமாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட்

Signed by S UTHAMARAJ
Additional Sessions Judge.

திங்கள் 29 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

Signed by S UTHAMARAJ
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**உபய தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**

**இல்லை**

Signed by S UTHAMARAJ
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

Signed by S UTHAMARAJ
Additional Sessions Judge.